**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2024**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா

என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 21 இன் பிரகாரம் முக்கியமாக கணக்கீட்டுக் கொள்கைகளின் குறிப்புக்கள் மற்றும் ஏனைய விரிவான குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 15,612,062 ஆன நிலையான வைப்புக்களுக்கான | இணங்குவதுடன் 2025 ஆம் ஆண்டின் கணக்குகளில் விரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் போதியளவான விரிவான குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விரிவான தகவல்கள் (சொத்துக்களின் தன்மை மற்றும் திரவத்தன்மை) குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 48 இன் பிரகாரம் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானம் மற்றும் செலவினங்கள் தனித்தனியாக அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் பணிக்கொடை செலுத்தும் போது உத்தியோகத்தரிடம் இருந்து மேற்கொள்ளப்பட்ட கழித்தல்கள் உரிய பணிக்கொடை செலவினக் கணக்கில் செலவு வைத்ததன் காரணமாக மீளாய்வாண்டின் வருமான மற்றும் செலவினம் ரூபா 463,018 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதுடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக இனங்கண்டு தனித்தனியாக அறிக்கையிடப்பட்டுள்ளது என நிதிக்கூற்றுக்களை சான்றுப்படுத்துவதற்கு முன்னர் பணிப்பாளர் (நிதி) இனால் உறுதி செய்தல் வேண்டும். |
| (இ) | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி இலக்கம் 14 இன் பிரகாரம் வூஸ்ச சமுத்திர பல்கலைக்கழக கட்டிடத்தின் கட்டம் II இன் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் 2021 நவம்பர் 04 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 16.36 மில்லியன் கட்டிட சொத்தாக மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலையாக அறிக்கையிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் கட்டிடங்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்தும், நடைமுறை வேலைகளின் பெறுமதி அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2021 நவம்பர் 04 முதல் 2024 திசெம்பர் 31 வரையான காலத்திற்குரிய பெறுமானத் தேய்வு பெறுமதியான ரூபா | இணங்குவதுடன் 2025 ஆம் ஆண்டின் கணக்குகளில் வெளிப்படுத்தப்படும். | இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தின் பெறுமதியை மூலதனமாக்கி அதற்காக பெறுமானத் தேய்வுக் கணிப்பீடும் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,174,594 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் பந்தி இலக்கம் 16 இன் பிரகாரம் சேவை வருமானம் பூர்த்தி செய்யும் சதவீதத்தின் அடிப்படையில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய 08 பாடநெறிகளின் வருமானம் ரூபா 22,008,750 நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் இனங்காணப்பட்டு அப்பெறுமதி மீண்டும் முற்பெறுவனவு வருமானமாக நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றிலும் மேற்கொள்ளப்படும் சீராக்கமாக மிகையில் குறைத்து வைக்கப்பட்டதன் காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்தும், உரிமை மூலதனம் அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | பாடநெறி நடாத்திச் செல்வதற்காக 1 முதல் 3 வருடங்கள் வரை செலுத்தப்பட்டதுடன் அதற்காக ஏற்பட்டிருந்த இலாபம் உரிய பாடநெறி பூர்த்தி செய்யப்படுகின்ற ஆண்டிற்குரிய நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கும் வரை அது நடைமுறைப் பொறுப்பாக இனங்காணப்பட்டுள்ளது. | இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சேவை வருமானம் பூர்த்தி செய்யும் சதவீதத்தின் அடிப்படையில் இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 20 பாடநெறிகளுக்குரிய ரூபா 37,611,680 மொத்த வருமானம் ஒன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் அந்த பாடநெறிகளுக்கு உரிய உழைக்கப்பட்ட வருமானம் கணக்கீடு செய்யப்படாமல் ரூபா 929,445 செலவினம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.<br>அவ்வாறே மீளாய்வாண்டின் போது 08 பாடநெறிகளுக்கு உரிய ரூபா 5,725,950 வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக எந்த ஒரு செலவினமும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | செலவினங்கள் பாடநெறி ஆரம்பத்தின் போது மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் செலவினம் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது கணக்கீடு செய்வதற்காக வருமானம் பிற்போட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உழைக்கப்பட்ட மொத்த பாடநெறி வருமானமும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இற்குரிய பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த பணம் உரிய ஆண்டின் வருமானமாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கு முன் அரச மற்றும் செயற்திட்டங்களினால் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்த கூட்டுமொத்தமான ரூபா 955,123,309 ஆன பிரதான வருமானமாக இனங்காணப்படாமல் ஏனைய ஒதுக்கமாக நிதிக்கூற்றுக்களின் மூலம் காண்பிக்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் திரண்ட மிகை குறைத்தும் உரிய மூலதன மற்றும் வருமான ஒதுக்கப் பெறுமதி அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்து குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த பணம் உரிய ஆண்டின் வருமானமாக இனங்காணப்படல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து அறவிடப்படுகின்ற மீள செலுத்த வேண்டிய ரூபா 1,550,832 ஆன நூலக வைப்பு நிதி நிலமைக் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் மூலதனம் மற்றும் ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட உரிமை மூலதனப் பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்தும் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதுடன் 2025 ஆம் ஆண்டின் கணக்குகளில் சரி செய்யப்படும். | சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் மற்றும் உரிமை மூலதனம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளிநாடு செல்லும் போது பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறியமை தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் 04 | இணங்குவதுடன் அறவிட வேண்டிய தொகை 2025 ஆம் ஆண்டின் போது அட்டுறு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை மீறுகின்ற விரிவுரையாளர்களிடம் இருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 2,966,856 பெற வேண்டிய பணமாக குறிப்பிடப்படாமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனப் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தமாக ரூபா 13,329,183 ஆன 03 வருடங்களை விஞ்சிய பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் பரிந்துரையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரவைக் குறிப்பின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்ட போது இதுவரை அந்த மீதியை பதிவழிப்பதற்காக தேவையான உரிய அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லை. | கணக்கீட்டு உத்தியோகத்தரால் பெற வேண்டிய பணத்தை அறவிடல் தொடர்பாக முறையான திட்ட முறைமை ஒன்று தயாரித்து எழுத்து மூல ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட 01 முதல் 02 வருடங்கள் வரையான காலத்தில் இருந்து காணப்படுகின்ற ரூபா 3,546,667 மற்றும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து காணப்படுகின்ற ரூபா 4,012,157 மீதியை தீர்த்து வைப்பதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 2,496,836 ஆன அட்டுறு | மீதிகளை பதிவளிப்பதற்காக தேவையான உரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறாது இருந்தமை மற்றும் தீர்த்து வைக்கப்படாத அட்டுறு செலவினம் 2025 ஆம் ஆண்டின் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு உத்தியோகத்தரால் செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்துவைத்தல் தொடர்பாக முறையான திட்ட முறைமை ஒன்று தயாரித்து எழுத்து மூல ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். |

செலவினத்தைத் தீர்த்து வைப்பதற்கும் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் உடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 396(ஈ) | 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத பெறுமதி ரூபா 904,298 ஆன 16 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 103,000 முதல் ரூபா 1,047,596 வரையான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற பணவீக்க நிலமையின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்களின் கிரயம் உயர்வடைந்து சென்றதன் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திச் செல்லும் போது நடைமுறைப் பிரச்சனைகள் தொடர்பாக கவனம் செலுத்தி உரிய முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | திறைசேரி அங்கீகாரம் இன்றி செயல் நிமித்த உயர் கட்டுநிதி வழங்கக் கூடிய ரூபா 100,000 நிதி எல்லையை விஞ்சி முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காது இருத்தல் வேண்டும். |
| (இ) | 2023 சனவரி 18 ஆந் திகதி இலக்கம் BD/HRD/126/214/19/2023 என்ற திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளிநாடு செல்லும் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பிணைமுறி உடன்படிக்கையை மீறிய 06 விரிவுரையாளர்களிடம் இருந்து மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா 3,119,677 தொகை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கைக் கடிதத்தில் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கல்வி சார் பணிகளுக்காக சம்பளத்துடன்/ சம்பளம் இன்றி வெளிநாடு சென்ற பல்கலைக்கழக பதவியணியினரின் அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2014 இன் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் 66 ஆவது பிரிவு | 2014 மார்ச் 26 ஆம் திகதிய இலக்கம் 06/2014 என்ற பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை மூலம் தீர்மானிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா பிரிவுகளுக்காக பொழுதுபோக்கு படியாக சட்டத்திற்கு முரணாக ரூபா 2,619,166 செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தின் பிரகாரம் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் 66 ஆவது பிரிவிற்கு முரணாக செலுத்தாதிருத்தல் வேண்டும். |
| (உ) | 1992 இன் 62 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு (திருத்த) சட்டத்தின் 02 ஆம் பிரிவு | கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் 01 மாதத்திற்கும் 11 மாதங்களுக்கும் இடையிலான காலம் தாமதமடைந்ததன் அடிப்படையில் 06 உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய மிகைக் கட்டணப் பெறுமதி ரூபா 715,458 மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய மிகைக் கட்டணமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | ரூபா 715,458 தொகை மிகை கட்டணமாக செலுத்துவதற்காக கணக்கு பிரிவிற்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. | பணிக்கொடைக் கொடுப்பனவுகள் (திருத்த) சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை செலுத்துதல் தாமதம் அடைந்தன் அடிப்படையில் செலுத்த வேண்டிய மிகைக் கட்டணம் காணப்படுமாயின் அது தொடர்பாக கொள்கைத் தீர்மானம் எடுத்து மிகைக் கட்டண உரித்துள்ள உத்தியோகத்தர்கள் அல்லது உரிமையாளர்களுக்கு அறிவித்து உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,554,243 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,733,753 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 18,287,996 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சம்பளம் மற்றும் பயிற்சி செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது கல்வி சார் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை நடாத்தி செல்வதற்காக வாடகை அடிப்படையில் கட்டிடம் ஒன்று வாடகைக்கு பெறப்பட்டதுடன் அதற்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கட்டிட வாடகை, நீர் மற்றும் மின்சார செலவினமாக முறையே ரூபா 200,724,819 மற்றும் ரூபா 21,421,803 செலுத்தப் பட்டிருந்தது. எனினும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 300 மில்லியன் நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்ட போதிலும் கட்டிடம் நிர்மாணிக்கப்பட வில்லை. | தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 300 மில்லியன் மேலதிக நிதியேற்பாட்டின் அடிப்படையில் ஐந்து மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழகத்தால் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முடியாமையினால் உயர் கல்வி மாணவர் வசதி வழங்குவதற்காக பெறுகை திட்டத்தைப் பின்பற்றி வாடகை அடிப்படையில் கட்டிடம் ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. தற்போது பல்கலைக்கழகத்திற்காக கட்டிடம் ஒன்று கொரிய உதவியின் அடிப்படையில் கட்டியெழுப்பும் செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக பல்கலைக்கழகத்தினதும் வரிசை அமைச்சினதும் கவனம் செலுத்தி அமுல்படுத்தப்படுகின்றது. | தேவைக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் நிர்மாணங்களை திட்டமிட்டு காலரீதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உலக வங்கி உதவி (AHEAD) இன் கீழ் பல்கலைக்கழகத்தின் மாணவர் விவகாரங்கள், பரீட்சை, நிதி, நிர்வாகம் மற்றும் ஏனைய பொதுவான செயற்பாடுகளை தானியங்கி அடிப்படையில் மேற்கொள்வதற்காக Integrated Education Management Information System (IEMIS) | சிற்சில பிரச்சனைகளுக்கு உரிய software தொடர்பான பிரச்சனைகள் காணப்பட்ட போதும் சில பிரிவுகள் இதனை தற்போது பயன்படுத்துகின்றது. இது தொடர்பாக பல்கலைக்கழகத்தின் கணக்காய்வு மற்றும் | தகவல் முறைமைக்குரிய 14 மாதிரிகள் உரிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| என்ற பெயரில் 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முதல் 2022 பெப்ரவரி 26 (180 நாட்கள்) திகதி வரையான கால எல்லைக்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் அந்த தனியார் நிறுவனம் 2027 பெப்ரவரி 06 ஆந் திகதி வரை இந்த தகவல் முறைமைக்குரிய சேவை வசதிகளை வழங்குவதற்கு இணங்கி இருந்தது. கணக்காய்வுத் திகதி 2025 யூன் 04 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 14 மாதிரிகள் (Modules) உரிய பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சேவை வழங்கல் கிரயமான ரூபா 2,675,400 தொகையை உள்ளடக்கிய அதற்காக செலவிடப்பட்ட ரூபா 9,882,600 மொத்தத் தொகையும் பயனற்றதாக இருந்தது. அதற்கு மேலதிகமாக 2023 யூன் 05 முதல் 2025 யூன் 05 வரை ஒப்பந்த அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப ஆலோசனையாளர் ஒருவரை சேர்த்து மாதாந்தம் ரூபா 80,000 படியும் இதற்காக செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் அந்த மென்பொருள் தொடர்பாகவும் அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற பிரச்சனைகள் தொடர்பாகவும் அறிக்கை ஒன்று ஆளுகைச் சபைக்கு சமர்ப்பிக்குமாறும் அதனை அமுல்படுத்துவதற்கு சேர்க்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆலோசனையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை 2025 யூலை மாதம் நடைபெற்ற ஆளுகைச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஆலோசனை சேவை வழங்குகின்ற நிறுவனத்துடன் காணப்படுகின்ற பிரச்சனைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் இதற்காக சேர்க்கப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனையாளரை முழு நேரமாக இதற்காக ஈடுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான அலுவலக வளவில் ஐந்து மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிப்பதற்காக ஆலோசனைக் கட்டணம் ரூபா 6,126,551 மற்றும் மண் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ரூபா 367,557 ஆக செலவிடப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 6,494,108 தொகை கட்டிடத் | தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 300 மில்லியன் மேலதிக நிதியேற்பாடு ஒதுக்கியதன் அடிப்படையில் ஐந்து மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக | தேவைகளுக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் நிர்மாணங்களை திட்டமிட்டு கால ரீதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகுதியை நிர்மாணித்தல் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமையின் காரணமாக பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. அவ்வாறே சலுகைக் கடன் வசதிகளை பெற்றுக் கொள்ளும் செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் சான்றிதழை உள்ளடக்கிய செலவினங்களுக்காகவும் ரூபா 1,513,936 செலவினம் இதற்காக செலவிடப்பட்டிருந்தது. | பல்கலைக்கழத்தால் ஆரம்ப நடவடிக்கையாக கட்டிடத்தை நிர்மாணித்தல் தொடர்பாக மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மண் பரிசோதனைக்காக ரூபா 6,494,107 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாது இருந்தது. | |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைகழத்திற்கும், பிரதேச நிறுவனங்களுக்கும் உரிய அங்கீகரிக்கப்பட்ட 32 பதவிகளுக்காக 158 ஊழியர்கள் பற்றாக்குறையாக இருந்ததுடன் 21 பதவிகளுக்காக 37 ஊழியர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். | அரசாங்கத்தின் ஆட்சேர்த்தல் வரையறுக்கப்பட்டதன் அடிப்படையிலும், தொழிர்சார் தொழில்நுட்பப் பிரிவின் கட்டமைப்பு தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சனையின் அடிப்படையிலும் ஊழியர்களை சேர்த்தல் தாமதம் அடைந்திருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் அத்தியவசியமான 60 பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பதற்கு பிரதமர் குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் ஆலோசனையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்து பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. | சேவைத் தேவையின் பிரகாரம் பதவியணியினரைத் திருத்தி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிட்ட மிகைப் பதவிகளில் 08 பதவிகளுக்காக மிகையாக இருக்கின்ற 09 உத்தியோகத்தர்களின் பதவிகளை அங்கீகரித்துக் கொள்ளாமல் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 12,351,193 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | சகல ஆட்சேர்த்தல்களும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சேவை எண்ணிக்கையின் பிரகாரம் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்தின் படி சேர்க்கப்பட்டிருந்தனர். | சேவைத் தேவையின் பிரகாரம் பதவியணியினரை திருத்தி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பேணிச் செல்வற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |